இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித்துறை

சிறப்புக் கல்விமாணி (விசேட தேவைகள்சார் கல்வி) நிகழ்ச்சித் திட்டம் - 2020/2021

SNU 5540/ESU3240- ஒப்பீட்டுக் கல்வியும் கல்விப் பிரச்சினைகளும்

இறுதிப் பரீட்சை - 2021

பகுதி - I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி - II இன் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 07.08.2021 நேரம் : பி.ப 01.30 - பி.ப 04.30

## பகுதி I

01. ஒப்பீட்டுக் கல்வி எனும் எண்ணக்கருவை வரைவிலக்கணம் செய்க.

02. விசேட தேவைசார் கல்வி ஆசிரியர் என்ற வகையில், ஒப்பீட்டுக் கல்வியினை கற்பதன் நன்மைகள் ஐந்தினை (05) எழுதுக.

03. பல்லின கல்வியுடன் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய மூன்று (03) வழிகளினை விபரிக்குக.

04. தேசிய மட்டத்தில் நாட்டில் மொழிக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்த தேவையான ஐந்து (05) பணிகளைக் குறிப்பிடுக.

05. 1902 ஆம் ஆண்டில் இடைநிலை கல்விச் சட்டத்தினை (பல்பொர் சட்டம்) சட்டபூர்வமாக்குவதற்கு எடுக்கப்பட்ட குறிப்பான பணிகள் இரண்டைக் (02) குறிப்பிடுக.

06. யப்பானில் மெகி ஆட்சியில் முன்வைக்கப்பட்ட கல்வி மறுசீரமைப்புக்களின் முக்கியமான பண்புகள் ஐந்தைக் (05) குறிப்பிடுக.

07. 1961 இல் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.

08. ஆசிரியர் என்ற வகையில் மாணவர்களிடையே நீர் விருத்தி செய்ய வேண்டிய ஏழு (07) தேரச்சிகளைப் பட்டியலிடுக.

(8 x 5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

09. i. யப்பானில் 1947 ஆம் ஆண்டின் கல்வி தொடர்பான அடிப்படைச் சட்டத்தின் பிரதான தத்துவங்கள் நான்கை (04) குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

ii. இலங்கையின் ஆரம்பக் கல்வியை மேலும் விருத்தி செய்வதற்கு, யப்பானின் ஆரம்பக் கல்வி முறைமையில் இருந்து எடுக்கக்கூடிய விடயங்களுக்கு நான்கு (04) உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. யப்பானின் உயர்கல்வியில் காணப்படும் பலங்கள் நான்கைப் (04) பெயரிட்டு அவற்றுள் இரண்டை விளக்குக.

(08 புள்ளிகள்)

10. i. கல்வியின் உள்ளார்ந்த வினைத்திறனை பாதிக்கும் காரணிகள் நான்கைப் (04) பெயரிடுக.

(04 புள்ளிகள்)

ii. அபிவிருத்தி அடைந்து வரும் நாடென்ற வகையில் இலங்கையின் இடைநிலை கல்வித்துறையில் நிலவும் பிரச்சினைகள் நான்கை (04) விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. மேலே நீர் குறிப்பிட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பின்பற்றக் கூடிய நடவடிக்கைகள் நான்கை (04) பிரேரிக்குக.

(08 புள்ளிகள்)

11. i. உலகமயமாக்கல் எனும் எண்ணக்கருவை சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. விசேட கல்வித் தேவைகள் கொண்ட பிள்ளைகளின் கல்வியை விருத்தி செய்வதற்கு உலக மயமாக்கலின் உடன்பாடான பண்புகளைப் பயன்படுத்துவதற்கு உதாரணங்கள் நான்கை (04) முன்வைத்து விபரிக்குக.

(08 புள்ளிகள்)

iii. உலகமயமாக்கலின் சில சூழ்நிலைகள் காரணமாக மாணவர்களின் ஒழுக்கநெறி மோசமடையக் கூடும். அத்தகைய சூழ்நிலையினை உதாரணங்களுடன் குறிப்பிட்டு அவற்றைத் தீர்ப்பதற்கான உத்திகள் நான்கினை (04) பிரேரிக்குக.

(08 புள்ளிகள்)

12. i. புரதான இலங்கையின் கல்விக் கட்டமைப்பின் மூன்று (03) அடுக்குகளையும் உதாரணங்களுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

ii. இலங்கை சுதேச கல்வி முறைமையின் மூன்று (03) விசேட பண்புகளை விபரிக்குக.

(06 புள்ளிகள்)

iii. புராதன இலங்கைக் கல்வி முறைமையில் காணப்பட்ட சிறந்த பண்புகள் மூன்றைக் (03) குறிப்பிட்டு குறித்த பண்புகள் விசேட தேவைக் கல்வியின் விருத்திக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என விவரிக்குக.

(08 புள்ளிகள்)

13. i. “இலங்கையின் கல்வி முறைமை போர்த்துக்கேய கால கல்வி முறைமையை விட ஒல்லாந்த காலத்தில் அதிக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.” இரண்டு காலப்பிரிவுகளின் கல்வி முறைமைகளை நான்கு (04) காரணிகளைத் தந்து ஒப்பிட்டு ஆராய்க.

(08 புள்ளிகள்)

ii. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கோல்புறூக் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் நான்கை(04) விபரிக்குக.

(04 புள்ளிகள்)

iii. 1867 ஆம் ஆண்டின் மேகரின் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் காரணமாக இலங்கை கல்வி முறையில் ஏற்பட்ட அபிவிருத்தி முன்னேற்புக்கள் நான்கை (04) குறிப்பிட்டு விபரிக்குக.

(08 புள்ளிகள்)

14. i. இலங்கையில் 1972 கல்வி மறுசீரமைப்புக்களின் விசேட பண்புகள் நான்கை (04) குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

ii. இலங்கையின் ஆசிரிய கல்வியில் 1948-1977 ஆகிய காலப்பகுதியில் இடம்பெற்ற முக்கிய விருத்திகள் நான்கை (04) விபரிக்குக.

(08 புள்ளிகள்)

iii. கற்றலில் விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நான்கை (04) குறிப்பிட்டு அவற்றை குறைப்பதற்கு இலங்கை அரசினால் மேற்கொள்ளக்கூடிய பரிகார நடவடிக்கைகள் நான்கு (04) விபரிக்குக.

(08 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*